மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களை தற்பொழுது 110 ஆக ஆக்கியிருக்கிறோம். அந்த 10லே ஒன்றுதான் இந்த ஓட்டப்பிடாரம் கூட்டுறவுச் சங்கம். அது விரைவிலே செயல்பட எல்லா நடவடிக்கையும் எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே, ஓட்டப்பிடாரத்தில் ஒரு கிராம கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் அமைக்கவிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. இப்பொழுது இருக்கிற கூட்டுறவு சங்கங்களில் வீடுகட்டுவதற்காக மனுக்களைக் கொடுத்தும் கடன் கொடுக்கப்படாமல் இருக்கிறதே அது அரசுக்குத் தெரியுமா? குறிப்பாக ஆதி திராவிடர் மக்களின் மனுக்களை மட்டும் பரிசீலனைக்கு அனுப்பி வையுங்கள் மற்றவைகளை அனுப்ப வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்களாமே—அதிலே கூட வந்த மனுக்கள் அத்தனைக்கும் பணம் கொடுக்கப்படாமல் இருக்கிற நிலைமை இருக்கிறதே அந்த நிலையை மாற்றி, அவர்களுக்கு உடனடியாக பணம் கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதம் ஆனது உண்மைதான், அது பணம் வரவேண்டிய இடத்திலிருந்து வருவதற்கு காலதாமதம் ஆனதால் ஏற்பட்ட விளைவு, அந்தக் காலதாமதத்தை தவிர்க்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. மீண்டும் இப்படிப்பட்ட புகார் வராது என்று கருதுகிறோம்.

கங்கை—கோதாவரி—காவிரி இணைப்புத் திட்டம்.

*வினா எண் 295 – **திரு. எம். சின்னசாமி; திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கங்கை-கோதாவரி, காவிரி ஆறுகளின் இணைப்புத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) மேற்படி திட்டத்தை விரைவுபடுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) இந்திய துணைக்கண்டத்திலுள்ள ஆறுகளை அபிவிருத்தி செய்வது கங்கை-காவிரி ஆறுகளை இணைப்பது போன்ற திட்டங்களை ஆய்வு செய்தபின், மத்திய அரசு தற்போது நாட்டில் உள்ள

1982 மார்ச் 1]

நீர் வளத்தை பெருக்க ஒரு தேசீய நோக்கு திட்டத்தை தயாரித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இமய மலை நதிகளின் வளர்ச்சிக்கும், மற்றும் இந்திய தீபகற்ப நதிகளின் வளர்ச்சிகும், தனியாக திட்டங்கள் வகுக்கப்படும். தீபகற்ப நதிகளின் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தற்பொழுது மகாநதி, கோதாவரி கிருஷ்ணா, பெண்ணார், காவிரி ஆகிய நதிகளின் இணைப்பு ஆய்வு செய்வது நோக்கமாகும். இத்திட்டத்திற்கு தமிழக அரசு தனது ஒத்துழைப்பை அளித்து வருகிறது. இது தொடர்பான மேல் நடவடிக்கைகள் மத்திய அரசால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திரு. எம். சின்னசாமி: இந்த ஆறுகளை இணைக்கும் திட்டம் பொறியியல் மேதை திரு விஸ்வேஸ்வரய்யா அவர்கள் திட்டமாகும். இது நீண்ட நாட்களாக பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆகவே, தேசிய ஒருமைப்பாடும் இதிலே இணைந்திருக்கிற காரணத்தினால் இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இந்தத் திட்டம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், நீண்ட காலமாக இந்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டு வருகிற ஒரு திட்டமாகும். சமீப காலத்தில் 1969-ல் அப்போதைய மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சராக இருந்த திரு. கே. எல். ராவ் அவர்கள் விரிவான ஆய்வு அறிக்கையை மத்திய அரசுக்குக் கொடுத்தார்கள். அதை இரண்டு மூன்று கட்டங்களாக மத்திய அரசு பரிசீலனை செய்தது. எப்படி பரிசீலித்துப் பார்த்தாலும் 1800 முதல் 2100 அடி வரை நீரை உயர்த்தி பம்ப் செய்துதான் கொண்டுவரவேண்டும் என்பதை எல்லா நிபுணர்களும் ஒத்துக்கொள்கிறார்கள். இதற்குத் தேவையான மின்சாரத்தை நம் நாடு இன்றைக்கு அளிக்கக்கூடிய நிலமையில் இல்லை. பணச் செலவு அதிகமாக இருப்பதால் இதை இரண்டாகப் பிரித்து இமய மலையைச் சார்ந்துள்ள நதிகளை இணைப்பது என்பதற்கு ஒரு திட்டமும், தீபகற்ப நதிகளை இணைப்பதற்கு என்று ஒரு திட்டமும் ஒரு நாஷனல் பெர்க்ஸ்பெக்டிவ் ப்ளான் என்று போட்டு நாம் அதிலே மிக முக்கிய பங்கு எடுத்திருக்கிறோம். இந்த இணைப்பால் தமிழ்நாட்டுக்கு மிகப் பெரிய நன்மை ஏற்படும். தீபகற்ப நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு இப்போது அதிகமான முக்கியத்துவம் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

திரு. எம். சின்னசாமி: டாக்டர் விஸ்வேஸ்வரய்யா அவர்கள் அந்த காலத்தில் திட்டமிடும்போதே இதற்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்று அந்தக் காலத்தில் மதிப்பிடப் பட்டது. இன்றைய உத்தேச மதிப்பீடு எவ்வளவாகயிருக்கும் என்று அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இது மத்திய அரசு பரிசீலனையில் உள்ள ஒரு திட்டமாகும். பொதுவாக இருக்கக்கூடிய சிரமங்களை மாநில அரசு உணர்ந்திருக்கிறது எனவே இது குறித்து எவ்வளவு தோராயமாக மதிப்பீடு, அதற்கு எவ்வளவு செலவாகும் என்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை.

திரு. என். பழனிவேல் : தேசீய அளவிலான இந்தத் திட்டத்தை மத்திய அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது நீண்ட காலமாக பரிசீலனையில் இருக்கக்கூடிய திட்டம். இதுவரை இத்திட்டத்திற்கான ஆய்வு வேலைகளை மத்திய அரசு ஆரம்பித்துள்ளதா? அப்படி ஆரம்பிக்காமல் இருந்தால் நல் மாநில அரசு அதற்கான யோசனைகளைக் கூறியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பதில் சுருக்கமாக இருந்தாலும் விளக்கமாக இருக்கிறது. இந்திய துணைக் கண்டத்தில் உள்ள ஆறுகளை அபிவிருத்தி செய்வது. கங்கை காவிரி ஆறுகளை இணைப்பது என்பதை முதலில் ஆய்வு செய்த போது அதிலுள்ள சிரமங்களை உணர்ந்த பிறகுதான் இமயமலை நதிகளின் வளர்ச்சிக்கும் ஒரு திட்டமும், தீபகற்ப நதிகளின் வளர்ச்சிக்கு ஒரு திட்டமும் என்று மகாநதி. கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணார், காவிரி என்று தென் மாநிலங்களை இணைப்பதை ஒரு கடடமாக பிரித்திருக்கிறார்கள். இரண்டாவது கடடத்திலுள்ள திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று நாம் பல்வேறு கட்டங்களில் ஆய்வு நடந்தபோதெல்லாம் பங்கேற்று வலியுறுத்தி வந்திருக்கிறோம். அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுத்தாலும் கூட இன்றைக்கு இருக்கக்கூடிய பொறியியல் கருத்துப்படி 43569 மில்லியன் கன அடி கொள்ளவு உள்ள ஒரு நீர்த்தேக்கத்தை அமைக்க எங்கெங்கே வாய்ப்பிருக்கிறதோ அங்குதான் இணைக்க முடியும் என்ற கருத்து இருக்கிறது. அப்படிப் பர்க்கப்போனால் அப்படிப்பட்ட ஒரு பெரிய நீர்த் தேக்கத்தை அமைப்பதற்கான வாய்ப்பு நமக்கு இல்லை. ஆனால் பக்கத்திலே உள்ள மாநிலங்களிலே அமைந்தாலும்கூட பற்றாக்குறை மாநிலமாக இருக்கின்ற தமிழகத்திற்கு பெருத்த நன்மை இருக்கும் ஆதலால் நாம் அதை வற்புறுத்தி வருகிறோம்.

திரு' குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டத்தை மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்ற தகவலைத் தந்ததற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1969 ஆம் ஆண்டிலேயே 8ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றலாம் என்று அப்போது மத்திய பாசனத் துறை

1982 மார்ச் 1]

அமைச்சராக இருந்த திரு. ராவ் அவர்கள்—அப்போது நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அவர்களைச் சந்தித்துப் பேசியபோது கங்கையை காவிரியோடு மட்டுமல்ல, கன்னியாகுமரியோடுகூட இணைக்கின்ற சாத்தியக்கூறு இருப்ப தாக சொன்னார்கள்—தெரிவித்தபோது நான் பராளுமன்ற உறுப் பினராக இருந்து அப்போது வலியுறுத்திப் பேசியதை திரு ஆர். வி. சுவாமிநாதன் அவர்களும் திரு ஆர். வெங்கட்டராமன் அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் மத்திய அமைச்சராக இருக்கிறபோது........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாடாளுமன்றத்திலிருந்து சட்டமன்றத்திற்கு வந்தால் 1,800 மைலுக்கு மேலே ஆகும்.

திரு. குமரி அனந்தன்: இந்தத் திட்டமே 1,800 மைல் நீளத்திற்குக் கொண்டுவந்து கன்னியாகுமரியிலேயே சேர்க்க வேண்டுமென்பதுதான் என்பதை நான் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றச் செய்வதன் மூலம் மாநில அரசு இந்திய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி யோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

(முற்பகல் 10-00).

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல் 1969 ஆம் ஆண்டு அப்போது மத்திய பாசனத் துறை அமைச்சராக இருந்த திரு. கே.எல். ராவ் அவர்கள் கொடுத்த திட்டத்தின்படி, கங்கை ஆற்றின் நீர் பாட்னாவில் நீர் ஏற்ற திட்ட மூலம் 1,865 அடி கட்டம் கட்டமாக உயர்த்தப்பட்டு ஒரு புதிய கால்வாயில் விடப்படும். இக்கால் வாய் விந்திய மலைகளைக் கடந்து பொச்சம்பாடு நீர்த்தேக்கத் துக்கு மேலே கோதாவரியில் சேரும். இதற்குப் பிறகு இந்தக் தண்ணீர் ஸ்ரீசைலம் அருகே கிருஷ்ணா நதிக்குக் கொண்டுவரப் படும். அதற்குப் பிறகு மேட்டூர் நீர்த்தேக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என்று முதலிலே சொல்லப்பட்டது. மேட்டூர் நீர்த்தேக்கத்திற்குக் கொண்டு வந்துவிட்டால் அதற்குப் பிறகு கன்னியாகுமரி வரையில் கொண்டுவருவதற்கு பிரச்சினை இருக்காது. மேட்டூருக்கு வந்துவிட்டால் பிறகு வேண்டிய இடங்களுக்குக் கொண்டுவரலாம். அதிலே ஒன்றும் பெரிய சிரமம் இருக்காது. இப்போதே கூட மாநில அரசு, மாநிலங் களுக்கிடையே உள்ள நதிகளை இணைப்பதற்கு கொள்கை அளவிலே பரிசீலனை செய்து வந்தாலும், மாவட்ட அளவிலே

கூட செய்தால் நல்லது என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. வெள்ள நேரங்களில் மழை நீர் கடலில் போய் வீணாகிறது. கடலில் போய் வீணாகின்ற அந்த மழை நீரைக்கூட பக்கத்திலே உள்ள படுகைளிலே கொண்டு சேர்க்கலாமா என்று யோசிக்கிறோம். இந்தப் பெரிய திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுகிறபோது குமரி பகுதி விடடுப் போய்விடாது. நிச்சயமாக வாய்ப்பு இருக்கும் என்று நம்புகிறேன்.

திரு. மி. வின்செண்ட் : தலைவர் அவர்களே, பாரதியின் நூற்றாண்டு விழா இது. 'கங்கை நதிப்புறத்து கோதுமைப் பண்டம், காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்'' என்று பாரதி பாடினார். பாரதியார் பாடிய அந்த உணர்வை நிறைவேற்றக்கூடிய முறையிலே இந்த இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்தத் திட்டம் கோதுமையைக் கொண்டுவருவதற்காகவும் வெற்றிலையைக் கொண்டுசெல்வதற்காகவும் மட்டுமல்ல. ஏற்கெனவே, கோதுமை வெற்றிலை எல்லாம் இரயில் மூலமாகவும் மற்றவைகள் மூலமாகவும் வந்துகொண்டிருக்கின்றன. வேறு வகையில் பார்க்கிறபோது இது ஒரு சமூகப் பொருளாதாரத் திட்டம் என்பதால் இதில் அரசு அக்கறை செலுத்திவருகிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக 1,800 அடி உயரத்திற்கு நீர் ஏற்ற வேண்டிய பிரச்சினை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு தேசத்திலே உணவுப் பிரச்சினை வெள்ளச் சேதம் இவைகள் இருக்கிறபோது இதை முக்கியமாகக் கருதி விஞ்ஞான வளர்ச்சி வேகமாகிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே அதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று மீண்டும் மத்திய அரசை வலியுறுத்த ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் கேட்பது மகிழ்ச்சிக்குரியது. இந்த முயற்சியிலே இன்னும் அதிகமான அக்கறையை அவர்கள் எடுத்துக்கொள்வார்களேயானால் நல்ல முடிவு ஏற்படும். மத்திய அரசு முதலிலே கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை ஆராய்ந்தது. இப்போது இமாலய நதிகள் திட்டம் என்று தனியாகவும், தீபகற்ப நதிகள் திட்டம் என்று தனியகாவும் நேஷனல் பெர்ஸ்பெக்டிவ் பிளான் என்ற முறையிலே தெரிவிக்கிறார்கள். எதுவாக இருந்தாலும் சரி. எனவேதான் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அரசு இதில் மீண்டும் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் ஆட்சேபணை இல்லை.

1982 மாாச் 1]

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கங்கையில் இருந்து கொண்டு வருவதற்கு முதல் நீரேற்றுத் திட்டத்திற்கே, 1,200 அடிக்கு மேல் உயர்ந்த அந்த நீரேற்றும் திட்டத்திற்கே தேவைப்படும் மின்சாரம் தற்போது இந்தியா முழுமையும் பயன் படுத்துகின்ற அளவிற்கு உள்ள மின்சாரம் தேவைப்படும் என்று அப்பொழுது கே. எல். ராவ் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி மறு பரிசீலனை செய்யப்பட்டதா ? எனவே, இது சுவைக்கு உதவக் கூடிய திட்டம் என்கின்ற அளவிற்கு முடிவு கள் எடுக்கப்பட்டனவா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இந்தத் திட்டம், 1,800 அடி, 2,000 அடிக்குமேல் உயர்த்த வேண்டியிருப்பதால் அதிக அளவிற்குத் தேவைப்படும் என்பதை மத்திய அரசும் ஒத்துக்கொண்டது. ஆகவே, இரண்டாகப் பிரித்து இமயமலை நதிகளின் வளர்ச்சித் திட்டம் என்றும் இந் திய தீபகற்ப நதிகளின் வளர்ச்சித் திட்டம் என்றும் வகுக்கப் படும். நாம் இப்பொழுது வலியுறுத்துவது மகாநதி கோதாவரி அதன் மூலம் கிருஷ்ணா பெண்ணார் காவிரி ஆகிய இவைகளை இணைக்கும் திட்டத்திற்கு நாம் இப்பொழுது முயற்சிகளை மேற் கொள்ள முடியுமே தவிர ஒட்டுமொத்தமாக கங்கை-காவிரி இணைப்பு என்பது இப்பொழுது சாத்தியமானதாக நமக்குப் பட வில்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இப்பொழுது இராணுவமோ அல்லது பயணிகளோ காஷ்மீரிலிருந்து கன்னியா குமரி வரைக்கும் செல்வதற்குச் சாலைகள் அல்லது இரயில் மூல மாகச் செல்வதற்கு, மலைகளைக் குடைந்து ஏற்பாடுகள் செய் யப்பட்டிருக்கின்றன. கங்கை-காவிரி இணைப்பு என்பதுநாடு பூராவுக்கும் உள்ள முக்கியமான பிரச்னை ஆகும். கங்கை-காவிரி இணைப்புக்கு அமெரிக்கா போன்ற நாடுகள் ஒப்புக்கொள் ளாத காரணத்தால் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று உலக வங்கி ஆலோசனை கூறியிருப்பதாகச் சொல்லப் படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தொழில் நுட்ப அடிப்படையில் உள்ளது பற்றித்தான் என்னிடத் தில் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. சமூக ,அரசியல் பிரச்னை களைப்பற்றி அரசுக்குத் தகவல் இல்லை.

பக்கிங்காம் கால்வாயை சீரமைக்கும் திட்டம்.

*வினா எண். 296— திரு. து. புருஷோத்தமன் : திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயணிகள்—சரக்கு-போக்குவரத்துக்காக பக்கிங்காம் கால்வாயை சீரமைக்க மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட் டுள்ளதா ?